1971 ஜூலை 3]

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், 24-6-1971-ஆம் தேதி அன்று லேபர் ஆபீசர் முன்னால் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பாராட்டுகிற அதே நேரத்தில், அதன் பலனாக தொழிலாளர்களுக்கு இன்னும் ஊதியம் கொடுக்காமலும், அவர்கள் மீண்டும் வேலைக்குப் போக முடியாமலும், அப்படி வேலைக்குச் சேருவதானாலும்கூட இன்னும் 3 மாதம் ஆகும் என்று இருக்கும் நிலைமையில் பிலாய் கட்டுமானக் கம்பெனியோடு செய்த ஒப்பந்தத்தை மறுபடியும் எண்ணூர் கட்டுமானக் கம்பெனி செய்ய அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, அதற்கான முயற்சிகள் எடுத்துக்கொண்டு இருப்பதால், இந்தக் கட்டத்தில் விரிவாகச் சொல்லமுடியவில்லை. அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ளும்.

(ஆ) மதுரையில் சில பஞ்சாலைகள் பல தொழிலாளர்களைத் தற்காலிகமாக வேலையிலிருந்து விடுவித்திருப்பதனாலும் ஓர் ஆலை ஒரு முறை மாற்றுப் பணியை நிறுத்திவிடுவதாக அச்சுறுத்துவதினாலும் ஏற்பட்டுள்ள நிலை.

THIRU K. T. K. THANGAMANI: Sir, I call the attention of the Hon. Minister for Labour to an urgent matter of definite public importance namely, the serious situation in Madurai following the heavy lay off in Madurai Mills, Meenakshi Mills Group, Mahalakshmi Mills in a concerted manner and a threat to close one shift in Meenakshi Mills causing enforced unemployment to Textile workers and impeding production.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, மதுரையிலுள்ள, மதுரை ஆலையில் 1971 ஜூன் திங்களில் பல தொழிலாளர்கள் வேலையில்லாமல் திருப்பியனுப்பப்பட்டார்கள். நாள் ஒன்றுக்கு மொத்தம் 470 தொழிலாளர்கள் வேலையில்லாமல் அனுப்பப்பட்டனர். நூல் ஏற்றுமதி நின்றுவிட்டதும், ஏற்றுமதிக்கான வாய்ப்பு குறைந்து விட்டதும், இருப்புகள் தேக்கமடைந்து உள்ளதுமே இதற்குக் காரணங்களாகும். இதற்கு முன்னர், சாதாரணமாக சராசரியாக நாள் ஒன்றுக்கு 250 தொழிலாளர்கள் மட்டுமே வேலையில்லாமல் அனுப்பப்பட்டனர். ஆலைத் தொழிலாளர்கள் மதுரை தொழிலாளர் நல அதிகாரியின் முன்னிலையில் இந்தப் பிரச்சினையை எழுப்பியுள்ளனர். இத்தகராறு குறித்து சமரச நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதுரையிலுள்ள இத்தொழிற்சாலையிலுள்ள தொழிற்சங்கங்களில் ஒன்றிரண்டைத் தவிர மற்ற எல்லாத் தொழிற்சங்கங்களும், பல கோரிக்கைகளை எழுப்பி வேலை நிறுத்த நோட்டீசு ஒன்றையும் நிர்வாகத்தினருக்கு அனுப்பியிருந்தார்கள். இக்கோரிக்கைகளில் முக்கியமானவை :

1. இப்பொழுது 58 வயதில் ஓய்வு பெறுவதை மாற்றி 60 வயது வரை வேலை செய்ய அனுமதித்தல்.

2. வேலை செய்த ஆண்டு ஒன்றுக்கு 25 நாட்கள் ஊதியம் என்று இருக்கும் 'கிராஜுட்டி' திட்டத்தை மாற்றி ஆண்டு ஒன்றுக்கு ஒரு மாத ஊதியமாக, உச்ச வரம்பின்றி மாற்றி அமைக்க வேண்டும்.

3. 240 நாட்களுக்கு மேல் வேலை செய்த பயிற்சி பெறும் தொழிலாளர்களுக்கு (நிரந்தரமான தொழிலாளிகளைப் போல்) முழு ஊதியம் கொடுக்க வேண்டும்.

இக்கோரிக்கைகளின் பேரில் மதுரை தொழிலாளர் அலுவலர் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். ஆனால் அதில் வெற்றி கிட்டவில்லை. தொழிலாளர் அலுவலர், வேலை நிறுத்தம் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டிருந்த போதிலும் தொழிலாளர்கள் 2—7—1971 காலை முதல் சுமார் 8,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இன்று மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையர் பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இப்போது மதுரையில் இருக்கக்கூடிய பல மில்களிலே ஒரே மாதிரியான நிலையில் முதலாளிகள் திட்டமிட்டு காரியங்கள் செய்து வந்தார்கள் என்றும், மதுரை மில்லைப் பொறுத்தவரையில் லே-ஆப்பில் தொழிலாளர்களை அனுப்பியதாலும், புதிதாக வேலைக்கு வந்த டெம்பரரி அப்பிரண்டிஸ் தொழிலாளர்கள் 5,000 பேருக்கு அதிகமாக தினசரி வெளியேற்றப்படுகிறார்கள். அவர்களுக்கு அபயம் கொடுக்கிற நிலையை வைத்துத்தான் பல மில்களிலே இருக்கும் தொழிற்சங்கங்கள் எச்.எம்.எஸ்., டி.எம்.கே; எல்லோரும் சேர்ந்து சென்ற மாதம் 1-ம் தேதி நோட்டீஸ் கொடுத்து அதன் அடிப்படையில் நேற்று வேலை நிறுத்தம் நடந்து இருக்கிறது. ஆகவே, அந்த வேலைநிறுத்தம் தொடர்ந்து நடக்குமானால் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கும் பகுதியாகிய 15, 16, 17, 21, 22 வார்டுகளில் உள்ள மக்களின் வாழ்வு பெரிதும் பாதிக்கும் என்ற காரணத்தால் இதற்காக அங்கே உள்ள அதிகாரிகள் மாத்திரமல்லாமல், இங்கே இருக்கும் லேபர் கமிஷனர் இன்னும் அதிக அதிகாரங்களைக் கொடுத்து ஒரு அதிகாரியை அனுப்பி அந்தத் தகராறைத் தீர்க்க அரசு தலையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

1971 ஜூலை 3]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இந்த அரசினுடைய கொள்கையே தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் ஏதாவது வேறுபாடு ஏற்பட்டால், அவர்கள் கலந்து பேசி முடிவு எடுக்க வேண்டும் என்ற அடிப்படையைக் கொண்டதாகும். ஆகையினால், மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் தெரிவித்தது போல், இந்தப் பிரச்சினையை விரைவில் முடிப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

3. அறிவிப்புகள்.

(அ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் பற்றிய மேலவைத் தலைவரின் செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கீழ்க்கண்ட சட்டமுன் வடிவுகள் சட்ட மேலவையில் 29—6—1971-ம் நாளன்று திருத்தங் களில்லாமல் நிறைவேற்றப்பட்டன என்று சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் வரப்பெற்றுள்ளது :—

(1) 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1971).

(2) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோக தாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1971).

மேலும், தமிழ் நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1971), 29—6—1971-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுக்கப்பட்டு பரிந்துரை ஏதும் செய்யப் படவில்லை என்றும் சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

(ஆ) சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றொரு அறிவிப்பு. சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்காக Madras University Senate) கீழ்க்கண்ட எட்டு பெயர்கள் நியமனம் செய்யப்பட்டன :—

1. திரு. கே. எஸ். கோதண்டராமய்யா
2. திரு. ஏ. சுப்பிரமணியம்
3. திருமதி த. ந. அனந்தநாயகி
4. திரு. மணலி சி. கந்தசாமி
5. திரு. க. சுப்பு
6. திரு. துரைமுருகன்
7. திரு. என். கணபதி
8. திரு. முனு ஆதி